
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வங்கிப் பரீட்சகர் (பொது)

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் வங்கிப் பரீட்சகர் (பொது) பதவிக்காக அதிக ஆர்வமிக்க தொழில்சார் நிபுணர்களை இலங்கை மத்திய வங்கி தேடுகின்றது



1.0 பணி / பொறுப்புக்கள்:

- 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் ஆகியவற்றின் நியதிகளிற்கமைய உரிமம்பெற்ற வங்கிகளில் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களினை மேற்கொள்ளல், பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் ஏற்படைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் தொழிற்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு உரியகால பரிகார வழிமுறைகளை ஏற்பாடுசெய்தல்.
- அத்தகைய பரிந்துரைகள் உடனடியாகவும் துல்லியமாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதை நிச்சயப்படுத்தும் பொருட்டு நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களில் மேற்கொள்ளப்படுகின்ற பரிந்துரைகளினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளின் பரீட்சகர்களுடன் மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வையாளர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிற்கு அமைவாகத் தொழிற்படுவதனை நிச்சயப்படுத்துவதற்கும் அடையாளம் காணப்படுகின்ற ஏதேனும் முறைகேடுகளை அல்லது தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகளை உடனடியாகக் கையாள்வதற்கும் குறித்தொதுக்கப்பட்ட வங்கிகளில் பிரத்தியேகமான / உடனடிப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல்.
- திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் அதனுடன் இணைந்த ஒழுங்குவிதிகளை மீளாய்வுசெய்தல், பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகள் மற்றும் உள்நாட்டுச் சந்தை அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தேவைப்படுகின்றவாறான திருத்தங்களை வரைதல் மற்றும் சட்டவாக்க கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்துவதற்கும் தொடர்புடைய பணிப்புரைகளை வழங்குதல்.
- ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்தலை நிச்சயப்படுத்துவதற்கு குறித்தொதுக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையை மேற்கொள்ளல்.
- அனைத்துச் சமர்ப்பிப்புக்களும் காலந்தவறாமலும், துல்லியமாகவும் இணங்கியொழுகும் முறையிலும் கையாளப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு குறித்தொதுக்கப்பட்ட வங்கிகள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்தான ஒழுங்குமுறை ஒப்புதல் கோரிக்கைகளினைச் செயன்முறைப்படுத்தல்.
- பரீட்சிப்பு நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் வளர்ச்சியடைந்து வருகின்ற இடர்நேர்வுகளிற்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களில் மாற்றங்கள், தொழிற்றுறைப் போக்குகள் மற்றும் நிதியியல் சந்தை நிலைமைகள் என்பன குறித்து தொடர்ந்து அறிந்திருத்தல்.
- ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை அதிகரிப்பதற்கும், வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் இணங்குவிப்பை நிச்சயப்படுத்துவதற்கும் திணைக்களத்தினுள் வளர்ச்சியடைந்து வருகின்ற மேற்பார்வைத் தொழில்நுட்ப முன்னெடுப்புக்களின் நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- அலுவலர்களின் விடயதான அறிவை மேம்படுத்துவதற்கான இயலாற்றலைக் கட்டியழுப்புவதற்கும் விருத்திசெய்வதற்கும் பங்களிப்புச் செய்தல்.
- இடர்நேர்வு அடிப்படையிலான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் பரீட்சிப்புக்கள், உடனடிப் பரீட்சிப்புக்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை நிச்சயப்படுத்துவதற்கு பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் நடவடிக்கைகள் மீதான 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 22ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய தளத்திலான / தளத்திற்கு அப்பாலான பின்தொடர்தல் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல்.
- வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்களை அடைவதற்குப் பங்களிக்கும் வகையில், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முகாமைத்துவத்தினால் குறித்தொதுக்கப்பட்ட தேவைக்கேற்ற கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்.
- மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் இப்பதவிக்குரிய முதன்மை கடமைகள் மற்றும் பொறுப்புக்களை எடுத்துரைக்கின்றதுடன் முழுமையானதொன்றாக கருதப்படலாகாது. தெரிவுசெய்யப்படும் அபேட்சகர், தேவைக்கேற்றவாறு மத்திய வங்கியின் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கேற்ப மேலதிக கடமைகளுக்கும் பொறுப்புக்களுக்கும் குறித்தொதுக்கப்படலாம்.

2.0 தேவைப்படும் குறைந்தபட்ச தகைமைகளும் அனுபவமும்:

2.1 கல்விசார் / தொழில்சார்ந்த தகைமைகள்:

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்லைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கீட்டில், வங்கித்தொழிலில், நிதியில், வியாபார நிர்வாகத்தில், வர்த்தகத்தில், புள்ளிவிபரவியலில் குறைந்தபட்சம் 2ஆம் வகுப்பு (மேல் பிரிவு) அல்லது உயர்ந்தபட்சம் 4.0 புள்ளிகளில் குறைந்தபட்சம் 3.5 தரப் புள்ளிச் சராசரியுடன் அல்லது குறைந்தபட்சம் 75% நிறையேற்றப்பட்ட சராசரிப் புள்ளிகளுடன் சிறப்பு இளமாணிப் பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள்) பெற்றிருத்தல் வேண்டும்

  அல்லது

- பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றுடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்லைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கீட்டில், வங்கித்தொழிலில், நிதியில், வியாபார நிர்வாகத்தில், வர்த்தகத்தில், பொருளியலில், புள்ளிவிபரவியலில், கணிதத்தில், பொறியியலில் இளமாணிப் பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள்) அல்லது முதுமாணியில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது உயர்மட்ட (குறைந்தபட்சம் ஒரு (01) வருடம் பட்டப்பின்படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல்
  - இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CA Sri Lanka)
  - ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CIMA – UK)
  - பட்டய சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பின் இணை உறுப்பினர் (ACCA)
  - ஐக்கிய அமெரிக்காவின் சான்றுப்படுத்தப்பட்ட நிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனத்தின் பட்டயம் பெற்றவர் (CFA – USA)
  - இலங்கையின் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CMA – SL)
  - உலகளாவிய இடர்நேர்வு தொழில்சார் நிபுணர்கள் அமைப்பிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதியியல் இடர்நேர்வு முகாமையாளர் (FRM) தகைமை
  - இலங்கை வங்கியியலாளார்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (IBSL-SL)

2.2 அனுபவம்:

- கணக்கீட்டில், வங்கித்தொழிலில், நிதியில், வியாபார நிர்வாகத்தில், வர்த்தகத்தில் மற்றும் புள்ளிவிபரவியலில் ஆகிய துறைகளில், தகைமைக்குப் பின்னரான (2.1 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள்) குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல். இவ்வனுபவத்தினை நிதியியல் நிறுவனமொன்றில் பெற்றிருப்பது விரும்பத்தக்கதாகும்.

3.0 தேவைப்படும் திறன்கள் / தகுதிகள் :

- கணக்கீடு மற்றும் நிதியியல் கூற்றுக்கள் பகுப்பாய்வுக்கான பகுப்பாய்வுசார் திறன்கள்
- நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் தொடர்புபட்ட முறைமைகள் ஆகியவற்றில் அறிவு
- கொடுகடன், தகவல் தொழில்நுட்பம், தொழிற்பாட்டுசார், சந்தை மற்றும் திறைசேரி உள்ளடங்கலாக இடர்நேர்வு மதிப்பீட்டில் அறிவு
- வங்கித்தொழில் சட்டங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் அத்துடன் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் மற்றும் மேற்பார்வையுடன் தொடர்புடைய இணங்குவிப்பு பற்றிய சரியான புரிந்துணர்வு
- கணினி அறிவு (குறிப்பாக Microsoft Word மற்றும் Excel)
- வாய்மூல மற்றும் எழுத்திலான தொடர்பூட்டல் / எடுத்துரைப்புத் திறன்கள்

4.0 வயது எல்லை:

- 2026.11.15 திகதி அன்று 35 வயது அல்லது அதற்கு குறைவான வயதுடையவராக இருத்தல்

5.0 தொழில்:

- வெற்றியடைந்த அபேட்சகர்கள் இரண்டு (02) வருடகால தகதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்டு, இலங்கை மத்திய வங்கியின் நிரந்தர பதவியணியில் பதவிநிலை வகுப்பு தரம் ஐ இல் ஆட்சேர்ப்பு செய்வதற்கு கவனத்திற்கொள்ளப்படுவர். தகதிகாண் காலப்பகுதியினை நிறைவு செய்ததன் பின்னர், அவர்கள் குறிப்பிட்ட பதவியில் உறுதிப்படுத்துவதற்கு கவனத்திற்கொள்ளப்படுவர்.

6.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

- இலங்கை மத்திய வங்கியின் ஏற்புடைய சம்பள அளவுத் திட்டங்களுக்கு இணையான கவர்ச்சிகரமான சம்பளம், சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நன்மைகள், மருத்துவ நன்மைகள், ஊழியர் கடன் வசதிகள், ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள்

தேர்வு நடைமுறை

- குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச பிரமாணங்களை நிறைவுசெய்கின்ற அபேட்சகர்கள் மேலதிக மதிப்பீடுகளுக்காக தெரிவட்டவணைப்படுத்தப்படுவர். தொழில்நுட்பத் திறன் மதிப்பீடுகளையும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப்பரீட்சைகளையும் இது உள்ளடக்கியிருக்கலாம்.

விண்ணப்பங்கள்

தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள அத்துடன் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புகின்ற இலங்கைப் பிரசைகள் தங்கள் விண்ணப்படிவங்களை **2026.11.15** அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் இணைப்பின் ஊடாக மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இணைப்பு: ***https://www.cbsl.gov.lk/en/careers***

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே உள்ள இணைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

முடிவுத் திகதியிலுள்ளவாறு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறமாட்டார்கள். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான தகுதிப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற கல்விசார் / தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் என்பவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை பதிவேற்றம்செய்யுமாறு விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர். கல்விசார் / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்திற்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

மதிப்பீடுகளுக்கு முன்னர் நடாத்தப்படும் சான்றிதழை உறுதிப்படுத்துவதில் தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எவ்விதத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும். பதவிகளை நிரப்புவதற்கான எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான அல்லது ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பதவியின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, தகைமைகளினதும் (கல்விசார் / தொழில்சார் தகைமைகளை உள்ளடக்கிய விடயப் பரப்பு), அனுபவத்தினதும் தொடர்பினைத் தீர்மானிப்பதற்கும் விண்ணப்பங்களை தெரிவட்டவணைப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு தற்றுணிபுள்ளது. தெரிவட்டவணைப்படுத்தப்படும் அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் தெரிவுசெய்யப்படும் அனைத்து அபேட்சர்களுக்கும் ஏற்புடையதாகவிருக்கும்.

பணிப்பாளர் – மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715